பற்றிய விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. அரசாங்கத்தின் கொள்கையில் அதை தற்போது நிறுத்தும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

English medium schools

* 405 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of High Schools and Elementary Schools in this State (apart from convents) which impart instructions to students in English medium also during the academic year 1969-70;

(*b*) the strength under English medium sections in each class; and

(*c*) the average proportion of the students in the English medium classes to those in other mediums in those schools?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே,

(அ) உயர்நிலைப் பள்ளிகள் 204 (கான்வென்ட் தவிர). தொடக்கப் பள்ளியில் ஆங்கிலப் பயிற்சி மொழி வகுப்பு கிடையாது.

(இ) 1-வது வகுப்பிலே 45-ம், இரண்டாம் வகுப்பில் 47-ம், மூன்றும் வகுப்பில் 53-ம், நான்காம் வகுப்பில் 55-ம், ஐந்தாம் வகுப்பில் 44-ம் இருக்கின்றன. இந்த வகுப்புகள் சென்னை, தி.நகர் வித்தியோதயா மகளிர் உயர்நிலைப் பள்ளியில் மட்டும் நடத்தப்படுகின்றன. மற்ற பள்ளிகளைப் பொறுத்தவரையில் 6-ம் வகுப்பில் 8,508 மாணவர்களும், ஏழாம் வகுப்பில் 7,981 மாணவர்களும், எட்டாம் வகுப்பில் 7,765 மாணவர்களும், ஒன்பதாம் வகுப்பில் 7,495 மாணவர்களும், பத்தாம் வகுப்பில் 6,535 மாணவர்களும், பதினோரும் வகுப்பில் 5,343 மாணவர்களும், ஆக மொத்தம் 43,871 மாணவர்கள் இருக்கின்றனர்.

(உ) சராசரி விகிதாச்சாரம் 17:83.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, ஆங்கிலப் படிப்பை ஊக்குவிக்கும் வகையில் இன்னும் அதிகமாக இந்த எஜுகேஷன் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம்

வைத்திருக்கிறதா? அப்படி இருந்தால் அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலாவது, அல்லது தனியார் பள்ளிக்கூடங்களிலாவது இந்த வகுப்புகளை விஸ்தரிக்க உத்தேசமுண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இத்தகைய பள்ளிக்கூடங்களில் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் சில குறிப்புகளை வைத்து பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் இதற்கு அனுமதி அளித்து வருகிறார். எங்கும் தமிழ் இருக்க வேண்டுமென்ற கொள்கையை நாம் கடைப்பிடித்து வருவதன் காரணமாக, வெளி மாநிலங்களுக்கு மாற்றிச் செல்லும் வாய்ப்புடையவர்கள் மாணவர்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் இந்த ஆங்கிலப் பயிற்சி மொழி வகுப்புகள் வைக்கப் பட்டிருக்கின்றன. இதைத் தவிர, மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரும் பள்ளிகளிலும் ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் அதைத் தனியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்கள் அந்தந்த வட்டாரங்களில் உள்ள தேவையை உத்தேசித்து, அவைகளுக்கு அனுமதி வழங்கி வருகிறார்.

நீடாமங்கலம் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம்

***406. வின—திரு. ந. சோமசுந்தரம்** : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், நீடாமங்கலம் உயர்நிலைப்பள்ளி வசதி அற்ற கட்டடத்தில் நடத்தப்படுவது உண்மையா?

(இ) அப் பள்ளியை அரசு ஏற்று புதிய கட்டடம் கட்ட மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இப் பள்ளியை அரசு ஏற்று நடத்தும் பிரேரணை ஏதும் வரவில்லை.

போக்குவரத்தை ஒழுங்குபடுத்த சாரணர்கள்

*** 407 வின—திரு. ஏ. சுப்பிரமணியம்** : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—